சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 115/2023 Date: 20.02.2024

வாதி தரப்பு சாட்சி–2ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கிய பாஸ்டின் | சாதி | : | –– |
| த/பெ | : | இருதயராஜ் | சமயம் | : | –– |
| கிராமம் | : | HMS Colony | தொழில் | : | |
| தாலுகா | : | மதுரை | வயது | : | 48 |

<u>முதல் விசாரணை–</u>

நான் மதுரையில் உள்ள ARAS automotive Pvt Ltd என்ற கம்பெனியில் Service Manager ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது பணியாளர் அடையாள அட்டை ஜெராக்ஸ் சா.சா.ஆ1(அசலுடன் ஒப்பிடப்பட்டது). 19.07.2022 மற்றும் 15.12.2022 விபத்து ஏற்பட்ட வாகனத்தை சரிசெய்வதற்காக கொண்டு வரப்பட்ட வாகனத்தின் எண்.TN67 BL 7788 ஆகும். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.8 மேற்படி வாகனத்தை பழுது பார்த்த வகையில் எங்கள் நிறுவனத்தில் இருந்து கொடுக்கப்பட்டது தான். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.8ல் மேற்படி வாகனத்தின் பதிவு எண். TN67 BZ 7788 என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளது. அதற்காக திருத்தம் செய்யப்பட்ட ரசீதுகளாக வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 வழங்கப்பட்டது. வா.சா.ஆ.4, வா.சா.ஆ.8, வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 ல் மேற்படி வாகனத்தின் Chasis எண் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாகனமானது 19.07.2022 அன்று வாகன விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்காக பழுது பார்ப்பதற்காக வந்தது.

அதற்கான தொகையை Future General Insurance Company செலுத்தினார்கள். அதற்காக எங்கள் நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்டது தான் வா.சா.ஆ.,16. 19.07.2022 அன்று மேற்படி வாகனத்தின் பின்புற பக்கெட் மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டிருந்தும் அதற்கான தொகையை Future General Insurance Company வழங்கியது. 15.12.2022 அன்றும் மேற்படி வாகனமானது மேற்படி மாற்றத்துடன் பழுது பார்க்க வந்த போது அதற்கான தொகையை மேற்படி இன்சூரன்ஸ் கம்பெனி வழங்க மறுத்துவிட்டது, அதற்கான காரணமாக பின்புற பக்கெட் மாற்றம் செய்யப்பட்டு உள்ளதாக ஆர்.சி.புக்கில் குறிப்பிடவில்லை என்று மறுத்துவிட்டது. எனவே அதற்கான தொகையை வாதி செலுத்தினார், அதற்காக வழங்கப்பட்ட ரசீது வா.சா.ஆ.15 தான்.